1984 பிப்ரவரி 16]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை மாநகரம், மற்றும் மாவட்ட தலைமையில் உள்ள நகரங்கள் அனைத்திலும் ஒரு குடும்ப கார்டுக்கு 10லிட்டர் மண்ணெண்ணெயும் மற்ற நகராட்சிகளில் இருப்பவர்களுக்கு 6 லிட்டரும், நகர பஞ்சாயத்துக்களில் இருப்பவர்களுக்கு 5 லிட்டரும், கிராமப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு 3 லிட்டரும் வழங்க வேண்டுமென்ற ஏற்பாட்டினுடைய அடிப்படையிலேதான் வழங்கப்பட்டு வருகிறது. இதிலே ஏதாவது தனிப்பட்ட குறைபாடுகள் எங்கேயாவது இருக்குமானால் அதனை நீக்குவதற்கு அரசு முயலும்.

(முற்பகல் 9–10)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரிய கிராமப்புற இடங்களிலும், தாலுக்கா பஞ்சாயத்து யூனியன் போன்ற இடங்களிலும், ஓரளவிற்கு மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதவில்லை ஆகவே ஊனமுற்றவர்கள், விதவைகள் போன்றவர்களுக்கு புதிதாக லைசென்சு கொடுத்து, அவர்களுக்கு 500 கார்டு என்று ஒதுக்கி, அந்தக் கார்டுதாரர்களுக்கு அவர்கள் மூலம் விநியோகம் செய்ய அரசு முன்வருமா? இத்தகையவர்களுக்கு வேறு வகையில் உதவிகள் செய்ய அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லை. ஊனமுற்றவர்களுக்கு, லைசென்சு வழங்கினால், அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று சரியான முறையில் விநியோகிக்க முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாகும். விதவைகள் போன்றவர்களுக்கு தர வேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்குப் பல்வேறு வகைகளில் சலுகைகள் தற்போது அளிக்கப்பட்டு வருகின்றன. இதிலே சலுகை அளிக்க இயலுமா, அதற்கு வழி இருக்கிறதா என்பது ஆராயப்படவேண்டியதொன்றாகும். அதற்கு இடம் இருக்குமானால் அதைப் பற்றி யோசிக்கலாம்.

தஞ்சை மாவட்டத்தில் விளையும் நெல்லை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி.

42 –(*வினா எண் 19849) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த நெல்லை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று விற்க உயர்நீதிமன்றத்தில் தஞ்சாவூர் நில உரிமையாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்துள்ளது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) தற்போது இதைப் பயன்படுத்தி வெளி மாவட்டங்களுக்கு நெல் எடுத்துச் செல்ல உயர்நீதி மன்றத்தை அணுகாத விவசாயிகளுக்கு பர்மிட் தராமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதி வெளியிட்ட தீர்ப்பை எதிர்த்து அரசு மேல் முறையீடு செய்தது. மேல்முறையீட்டின் மீது உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கையில் ஏகபோக கொள்முதல் அமுலிலுள்ள இடங்களிலேயிருந்து வெளியே நெல் எடுத்துச் செல்ல அரசு விதித்துள்ள தடை செல்லுபடியாகும் என்று தீர்ப்பு கூறியுள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1983-ஆம் ஆண்டில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலை

43 – (* வினா எண். 20913) திரு. என். வரதராஜன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983–ஆம் ஆண்டிற்கு ஒரு குவிண்டால் சாதா நெல்லுக்கு ரூ.132/- என நிர்ணயித்தது குறைவானது என்று மாநில அரசு, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். மத்திய அரசு 1983-84 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் விலைகளை நிர்ணயித்து அறிவிப்பதற்கு முன்பாக கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.150 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய உணவு அமைச்சருக்கு கடிதம் எழுதினார். ஆனால் மத்திய அரசு இக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஒரு முறை நிர்ணத்த விலையை அடுத்த பயிராண்டு வரை மாற்றுவதில்லை என்பதால் கடிதம் ஏதும் எழுதவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கடந்த ஆண்டு வறட்சி இருந்தது. இந்த ஆண்டும் கடுமையான புயல், வெள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைக்குக் கூடுதலாகவே உற்பத்தி செலவு ஆகிக்கொண்டு இருக்கிறது. ஆகவே அதைக் கருத்தில் கொண்டு கூடுதலாகக் கொடுக்கும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளதா? ஏற்கனவே நாம் அறிவித்து இருக்கும் உதவித் தொகையான ரூ.35 டிசம்பர் அல்லது ஜனவரி இறுதிக்குள் நிறுத்தி வைக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே, அதை நீட்டிக்க அரசு முன் வருமா? தமிழ்நாட்டில் இருக்கும் விவசாயிகளின் உற்பத்திச் செலவிற்கேற்ப அந்த விலையை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?